1972 ஆகஸ்ட் 19]

*92 Q.—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether complaints have been received by the Government during 1971 against Medical Officers in charge of Blood Bank, Rajah Mirasdar Hospital, Thanjavur;

(b) if so, the nature of complaints; and

(c) the action proposed to be taken by the Government?

திரு. சா. கணேசன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்--

(அ) தஞ்சாவூர் ராஜா மிராசுதார் மருத்துவமனையில் குருதி சேமிப்பு நிலையத்திற்குப் பொறுப்பு வகிக்கும் மருத்துவ அதிகாரிகளுக்கு எதிராகப் புகார்கள் 1971-ல் அரசுக்கு வந்தனவா?

(இ) ஆமெனில், அப்புகார்களின் தன்மை யாது?

(உ) அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

Ophthalmic Wing in Government Erskine Hospital, Madurai.

*93. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state--

(a) the steps taken by the Government to expand the Opnthalmic Wing in Government Erskine Hospital, Madurai; and

(b) the present stage of the works and the date on which they will be completed?

மதுரை அரசினர் எர்ஸ்கின் மனையில் கண் மருத்துவ மனைப் பகுதி

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை அரசினர் எர்ஸ்கின் மனையில் கண் மருத்துவ மனைப் பகுதியை விரிவு படுத்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சி என்ன?

(இ) அது எந்த நிலையில் இருக்கிறது? எப்பொழுது முடியும்?

மாண்புமிகு திரு. க அன்பழகன்: (அ) அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையின் கண் மருத்துவப் பகுதி விரிவு படுத்துவதற்காக ரூ. 5,50,000 செலவில் கட்டிடங்கள் கட்ட ஒப்புதல் அளிக்கப் பட்டிருக்கிறது.

(இ) கட்டிட வேலைகள் விரைவில் தொடங்கப்படும்.

Professor of Obstetrics in Thanjavur Medical College

* 94. *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU N. SUNDARESA THEVAR): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the post of Professor of Obstetrics has not been filled up for the past $1\frac{1}{2}$ years in Thanjavur Medical College; and

(*b*) if so, the reasons therefor?

தஞ்சை மருத்துவக் கல்லூரியில், மகப்பேறு துறை பேராசிரியர் பதவி

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (**திரு. என். சுந்தரேசத் தேவர் சார்பில்**): மாண்புமிகு மக்கள் நல்வாழ்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரியில், மகப்பேறு துறை பேராசிரியர் பதவி கடந்த 1½ ஆண்டு காலமாக பூர்த்தி செய்யப் பட இல்லையா?

(இ) ஆமெனில், காரணமென்ன?

மாண்புமிகு திரு க. அன்பழகன்: (அ) அப்பதவி 21—1—1970 முதல் 18—4—1972 வரை காலியாக இருந்தது.

(இ) இப்பதவிக்கு அடுத்து, அடுத்து நியமிக்கப்பட்ட மருத்துவ அதிகாரிகள் பணியில் சேராமையே காரணம்.

TRUTH ALONE TRIUMPHS